# சங்கரன்கோவில் நகராட்சி

## 2021-ம் ஆண்டு ஜூன் மாதம் 30.06.2021ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு சாதாரணக்கூட்டம்

பொருள் எண் : 1171

சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜூன் 2021 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

பொருள் எண் – 1172

சங்கரன்கோவில் நகராட்சிபகுதியில் கொரோனாதொற்று நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செயற்குறிப்பு எண்:6 நாள்: 22.05.2021ம் தேதிய அறிக்கையின்படி 24.05.2021 முதல் தளர்வுகளற்ற முழு ஊரடங்கு அமல்படுத்த வேண்டி தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக பொதுமக்களின் அன்றாட அத்தியாவ தேவைகளான காய்கறிகள் மற்றும் பழங்கள் ஆகியவை தங்குதடையின்றி கிடைக்க சம்மந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்கள் ஏற்பாடு செய்யவேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. மேலும் நகராட்சியின் பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள காந்தி நூற்றாண்டு நாளாங்கடியில் கொரோனா தொற்று பரவாமல் இருப்பதற்காக அரசின் உத்தரவுப்படி மூடப்படும் நிலைஏற்பட்டுள்ளது. இதற்காக காய்கறி வியாபாரிகள் தங்களுக்கு வந்துசேரும் காய்கறிகளை விற்பனைசெய்வதற்கு கொண்டுவந்து அங்கிருந்து வாகனங்களுக்கு பிரித்து அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே இதற்காக இந்நகராட்சியின் சார்பாக தற்காலிக ஏற்பாடாக ஏவிஆர்.எம்வி காலனியில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கு ரூ.7.40 லட்சத்திற்க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 1173

சங்கரன்கோவில் நகராட்சிபகுதியில் கொரோனா தொற்று பரவி வருவதாலும் தினசரி பாதிக்கப்பட்டாரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும் தமிழக அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படியும் தென்காசி மாவட்டஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவின்படியும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்: 9691/2021/ஜே2 நாள்: 11.05.2021ன்ப பேரிடர் மேலாண்மைசட்டம் மற்றும் பொதுசகாதார அவசர அவசதியத்தின் கீழ் பொதுசுகாதார பணியாளர்களுக்கு தினசரி பணிகளுக்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் கிருமி நாசினிகள் வாகனங்கள் மற்றும் இதரபொருட்கள் வாங்கிவழங்கிடவும் மற்றும் LCV வாகனத்திற்கும் அதற்கான செலவினத் தொகைரூ 30.00 இலட்சம் தொகை அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. நோய் பரவாமல் தடுப்பு நடவடிக்கைக்கு பொது சுகாதார பிரிவுக்கு உபகரணங்கள் வாங்க ரூ.18.00 லட்சம் போக மீதமுள்ள தொகையில் இரண்டு LCV வாகனம் வாங்குவதற்கு ஆணையாளர் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி வாகனம் வாங்குவதற்கு 21.05.2021ல் விலைப்புள்ளி பெறப்பட்டதில் வாகனம் ஒன்றுக்கு ரூ.8.30 இலட்சம் விலை குறிப்பிடப்பட்டுள்ளது. சென்னை நகராட்சிகளின் நிர்வாக ஆணையரக அலுவலகத்தில் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டதில் மேற்படிTATA (BS6) வாகனம் ஒன்றிறகு ரூ 8.00 இலட்சம் நிர்ணயம் செய்யப்பட்டதாக தகவல் பெறப்பட்டது. எனவே இரண்டு (2 x 8 =ரூ 16.00 இலட்சம்) ஏற்படுகிறது. பெறப்பட்ட மான்யத் தொகையில் ரூ 12.00 லட்சம் போக மற்றும் கூடுதல் செலவினத் தொகை ரூ4.00 லட்சத்திற்கு அவசர அவசியம் கருதி மன்ற முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்காக

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள கொரோனா தடுப்பு மற்றும் பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் – 1174

சங்கரன்கோவில் நகராட்சிக்கு சொந்தமான தேயிலைத்தோட்டக்கழகம் சார்பாக டேன் டீ விற்பனை நிலையம் அமைப்பதற்கு 8 x 8 அளவில் வாகன காப்பகம் அருகில் கடை வைப்பதற்கு நகர்மன்றத் தீர்மான எண்.1124 நாள்.29.01.2021ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.1184/2021/ஆர்3 நாள்.25.02.2021ன்படி பேரூந்து நிலையத்தில் டேன்டீ விற்பனை நிலையம் (தமிழ்நாடு தேயிலைத்தோட்டக்கழகம் மூலம்) நிறுவுவதற்கு நிபந்தனைகளின்படி நகர்மன்ற அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையின்படியும் தமிழ்நாடு தேயிலை தோட்டக்கழக விநியோகஸ்தர்க்கு கடை அமைப்பதற்கும் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணைன்படி பொதுஏல நிபந்தனைகள் (2021–2022 முதல் 2023–2024) தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகம் நிறுவனம் மூலம் டேன் டீ கடை அமைப்பதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் – 1175

சங்கரன்கோவில் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் தினசரி வீடுகள் வணிக வளாகங்களில் உருவாகும் குப்பைகள் துய்மை பணியாளர்களைக் கொண்டு தள்ளுவண்டிகள், 13 BOV மூலம் சேகரிக்கப்பட்டு நுண் உரமையங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது. BOV கள் பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில் தற்போது அனைத்து BOVகளும் Battery பாதிப்பு அடைந்துள்ளது. சார்ஜ் அதிக நேரம் இருப்பதில்லை 4 மணி நேரம் பயன்படுத்துவதற்கு கூட முடியாத நிலையிலுள்ளது. 3 வண்டிகள் மட்டுமே தற்சமயம் குறைபாடுகளுடன் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே 10 வண்டிகள் முற்றிலும் இயக்க முடியாமல் கிடப்பிலேயே உள்ளது. எனவே அனைத்து BOV வண்டிகளையும் Battery சரி செய்ய ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணி( Annual Maintenance Contract) செய்ய ஏற்படும் செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் – 1176

சங்கரன்கோவில் நகராட்சி அண்ணா பேருந்து நிலைய கட்டணக்கழிப்பிட குத்தகைதாரர் திருமதி R.இசக்கித்தாய் தலைவி தாமரை மகளிர் சுயஉதவிக்குழு என்பவர் மூன்றாண்டு குத்தகைக்காக தாம் செலுத்தியுள்ள முன்வைப்புத்தொகையை ரூ 200000/-யை திரும்ப வழங்க மனு கொடுத்தள்ளார். மேற்படி தொகை 2018-2019 காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது பேறிஞர்

அண்ணா பேருந்து நிலையத்தில் நவீன கட்டண கழிப்பறை சுங்கம் வசூலிக்கும் உரிமம் ( 2018-2019 2019-2020 மற்றும் 2020-2021) 31.03.2021ல் முடிவடைவதால் தாமரை மகளிர் சுயஉதவிக்குழுக்கு வழங்கப்பட வேண்டிய வைப்புத்தொகை ரூ.200000/-திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் – 1177

சங்கரன்கோவில் நகராட்சி பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவுக்கட்டண குத்தகைதாரர் திரு **K. சந்திரசேகரன்** என்பவர் மூன்றாண்டு குத்தகைக்காக தாம் செலுத்தியுள்ள முன்வைப்புத்தொகையை ரூ 100000/-யை திரும்ப வழங்க மனு கொடுத்தள்ளார். மேற்படி தொகை 2018-2019ம் காலந்தகடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவுக்கட்டண சுங்கம் வசூலிக்கும் உரிமம் ( 2018-2019 2019-2020 மற்றும் 2020-2021) 31.03.2021ல் முடிவடைவதால் திரு **K. சந்திரசேகரன் என்பவருக்கு** வழங்கப்பட வேண்டிய வைப்புத்தொகை ரூ.100000/-திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் – 1178

சங்கரன்கோவில் நகராட்சி தினசரி நாளங்காடியில் குத்தகைதாரர் திரு K. **தவசிக்கண்ணுப்பாண்டியன்** என்பவர் மூன்றாண்டு குத்தகைக்காக தாம் செலுத்தியுள்ள முன்வைப்புத்தொகையை ரூ500000/-**யை திரும்ப வழங்க** மனு கொடுத்தள்ளார். மேற்படி தொகை 2018-2019 காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தினசரி நாளங்காடியில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் ( 2018-2019 2019-2020 மற்றும் 2020-2021) 31.03.2021ல் முடிவடைவதால் திரு K. **தவசிக்கண்ணுப்பாண்டியன்** என்பவருக்கு வழங்கப்பட வேண்டிய தொகை வைப்புத்தொகை ரூ500000/-திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் – 1179

சங்கரன்கோவில் நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் JCB TN76S1966 வாகனம் 2012ம் வருடம் முதல் பயன்பாட்டில் இருந்து உள்ளது. மேற்கண்ட வாகனத்திற்கு FC கிடையாததால் நீண்ட நாட்களாக பராமரிப்புப் பணிகள் செய்யப்படாமல் உள்ளதென்றும் தற்போது வண்டியில் சில பழுதுகள் ஏற்பட்டு இயக்க இயலாத நிலையில் உள்ளதாகவும் அதனை சரிசெய்ய வேண்டும் என ஓட்டுனர் அறிக்கை செய்துள்ளார். சங்கரன்கோவிலில் JCB வாகனம் பழுதுசரி செய்ய உரிய நிறுவனம் இல்லாததால் JCB நிறுவனத்திலேயே மேற்கண்ட வாகனத்தை பழுது சரிசெய்யவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்ற அனுமதிக்காக. (ந.க.எண்.1112/2021/எச்1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் – 1180

சங்கரன்கோவில் நகராட்சியினை உள்ளடக்கிய தாமிரபரணி ஆற்றினை ஆதாரமாக கொண்ட இராஜபாளையம், சங்கரன்கோவில், புளியங்குடி, சிவகாசி மற்றும் திருவேங்கடம் கூட்டுக்குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ.543.20 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்திட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.06, நாள் 30.01.2017ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதி ஆதாரம் கீழ்கண்டவாறு ஆகும்.

| வ.எண். | விபரம் | தொகை (ரூ.) (கோடியில்) |
|---|---|---|
| 1 | உலக வங்கி கடன் தொகை | 9.11 |
| 2 | உலக வங்கி நிதி மற்றும் மத்திய, மாநில அரசின் மான்யம் | 31.89 |
| 3 | நகராட்சியின் பங்கு தொகை | 4.55 |
| | **மொத்தம்** | **45.55** |

தமிழ்நாடு நிலையான நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத்திட்டத்தின் உலக வங்கி கடன் தொகை 9.11 கோடி தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி நிதி சேவை நிறுவனத்தின் கடிதம் எண்.TNUDF/Projects/Sankarankovil/WSIS, நாள் 31.03.2017 அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும், நிர்வாக பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், இராஜபாளையம் அவர்களின் கடிதம் எண் சங்கரன்கோவில் CWSS/JDO/2019 நாள் 08.01.2020-ன் படி பல்வேறு காரணங்களில் திட்ட மதிப்பீட்டில் கூடுதல் செலவு ஏற்படுகிறது எனவும், மொத்த தொகை ரூ.51.41 கோடி ஒதுக்கீடு செய்யுமாறு கோரப்பட்டதின்படி இந்நகராட்சி கடிதம் ந.க.எண்.2720/2011/இ2, நாள் 07.01.2020-ன்படி கூடுதல் செலவீன தொகை ரூ.5.86 கோடி சேர்ந்து மொத்தம் ரூ.51.41 கோடிக்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. அதன் தொடர்ச்சியாக அரசாணை எண்.125, நாள் 04.10.2019-ன்படி கீழ்கண்டவாறு இத்திட்டத்திற்கு நிதி ஆதாரம் திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண். | விபரம் | தொகை (ரூ.) (கோடியில்) |
|---|---|---|
| 1 | உலக வங்கி கடன் தொகை | 9.11 |
| 2 | உலக வங்கி நிதி மற்றும் மத்திய, மாநில அரசின் மான்யம் | 31.89 |
| 3 | நகராட்சியின் பங்கு தொகை | 4.55 |
| 4 | IUDM | 5.86 |
| | **மொத்தம்** | **51.41** |

சங்கரன்கோவில், இராஜபாளையம், புளியங்குடி, திருவேங்கடம் கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகள் மெதுவாக நடைபெற்று வருவதாலும் சாலைகளை தோண்டுவதற்கு மற்ற துறைகளிடம் அனுமதி பெறுவதில் தாமதமாக இருப்பதாலும், கொரோனா தொற்று காலமாக இருப்பதாலும் பணிகள் ஏற்படுவதில் சுனக்கம் ஏற்பட்டுள்ளது.

மேலும், சங்கரன்கோவில், இராஜபாளையம், புளியங்குடி, திருவேங்கடம் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் உலக வங்கியுடன் இந்நகராட்சி ஒப்பந்தம் செய்து கொண்ட ஒப்பந்த பத்திரத்தின் கால அளவு 16.02.2018 மூன்று வருடங்கள் முடிவுற்றதால் மேற்படி ஒப்பந்தத்தினை 31.03.2022 வரை திருத்திய ஒப்பந்தம் செய்வதற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் – 1181

இந்நகராட்சியில் குடிநீர் பிரிவுக்கு ஆழ்குழாய் கிணறு, மற்றும் குடிநீர் விநியோக மெயின் விஸ்தரிப்பு பகிர்மானகுழாய்கள்,பிரதான குழாய்கள் மற்றும் அடிபம்புகள் சிறுமின்விசைபம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு ரூ-7,00,000/-க்கு இந்நகர்மன்ற தீர்மான எண்: 1165 நாள்:31.05.2021ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் 29.06.2021 ல் வரப்பெற்ற கீழ்க்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் திரு. P.சிவா என்பவர் மதிப்பீட்டுத்தொகைக்கு சமமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. P.சிவா என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தீன் அனுமதிக்காக குடிநீர் அவசர

அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு தொடர் நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்ற அனுமதிக்காக.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்டுத் தொகையை விட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1 | திரு. P.சிவா | ரூ 7,00,000/- | மதிப்பீட்டுக்குச்சமம் | |
| 2 | திரு. S. கார்த்தீசன் | ரூ 7,00,000/- | 1.94% | ---- |

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 1182

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், களப்பாகுளம் கிராமம் மஜரா என்.ஜி.ஓ.காலனி மீனாட்சி காம்பவுண்ட், கதவு எண்.923ல் இருக்கும் (லேட்) மீரான்மைதீன் மனைவி இஸ்லாமியர் வயது 69 வயதுள்ள நாகூர் மீரான் மற்றும் 9 நபர்கள் சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளரை 1 ம் பிரதிவாதியாக சேர்த்து முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் சங்கரன்கோவில் வழக்கு எண். O.S.No. **65/2021** ன் படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு எதிர்வழக்காட திரு.M.கருப்பசாமி., பி.ஏ.பி.எல். நகராட்சி வழக்கறிஞர் மூலம் வக்காழத்து தாக்கல் செய்யவும் இவ்வழக்கினை நடத்துவதற்கான வழக்கறிஞர் கட்டணம் மற்றும் செலவு தொகை ரூ.6000/- (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) திரு. M.கருப்பசாமி., பி.ஏ.பி.எல். நகராட்சி வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்காக.

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 1183

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், சங்கரன்கோவில் நகராட்சி வடக்குபுதுார் கிராமம் அச்சம்பட்டி வடக்குதெரு கதவு எண் 21C ல் வசித்து வரும் திரு சுப்பையர் குமாரர் திரு கணேசன் என்பவர் சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளரை 5 ம் பிரதிவாதியாக சேர்த்து முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் சங்கரன்கோவில் வழக்கு எண். O.S.No. **41/2021** ன் படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு எதிர்வழக்காட திரு.M.கருப்பசாமி., பி.ஏ.பி.எல். நகராட்சி வழக்கறிஞர் மூலம் வக்காழத்து தாக்கல் செய்யவும் இவ்வழக்கினை நடத்துவதற்கான வழக்கறிஞர் கட்டணம் மற்றும் செலவு தொகை ரூ.7000/- (ரூபாய் ஏழாயிரம் மட்டும்) திரு. M.கருப்பசாமி பி.ஏ.பி.எல். நகராட்சி வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்காக.

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 1184

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், சங்கரன்கோவில் நகராட்சி கதவு எண். 139/2/1 பாலாஜி நகர் தெற்கு சங்கரன்கோவில் முகவரியில் வசித்து வரும் திரு.S.ஆறுமுகம் த/பெ A.S.சண்முகவேல் என்பவர் இரயில்வேபீடர் ரோடு பகுதியில் அமைந்துள்ள சர்வே எண் 155/3P,4 P நகரளவு எண் 62ல் அமைந்துள்ள இடம் சம்மந்தமாக நகராட்சி ஆணையாளர் அவர்களை 4ம் பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண். W.P.(MD).No. **3280/2021** ன் படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு எதிர்வழக்காட திரு.பி.மகேந்திரன்., பி.ஏ.பி.எல். நகராட்சி வழக்கறிஞர் மூலம் வக்காழத்து தாக்கல் செய்யவும் இவ்வழக்கினை நடத்துவதற்கான வழக்கறிஞர் கட்டணம் மற்றும் செலவு தொகை ரூ.7500/- (ரூபாய் ஏழாயிரத்து ஐந்நூறு மட்டும்) திரு. பி . மகேந்திரன் பி.ஏ.பி.எல். நகராட்சி வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்காக.

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 1185

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், சங்கரன்கோவில் நகராட்சி நம்பர் 8 மெயின் ரோடு கதவு எண் 293ல் வசித்து வருகின்ற கார்த்திக் த/பெ (லேட்) மோகன் என்பவர் சர்வே எண் 266/1, மற்றும் 266/2 ல் உள்ள 33 செண்ட் இடம் சம்மந்தமாக நகராட்சி ஆணையாளர் அவர்களை 4ம் பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண். W.P.(MD).No. **8262/2021** ன் படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு எதிர்வழக்காட திரு.பி.மகேந்திரன்., பி.ஏ.பி.எல். நகராட்சி வழக்கறிஞர் மூலம் வக்காழத்து தாக்கல் செய்யவும் இவ்வழக்கினை நடத்துவதற்கான வழக்கறிஞர் கட்டணம் மற்றும் செலவு தொகை ரூ.7500/- (ரூபாய் ஏழாயிரத்து ஐந்நூறு மட்டும்) திரு. பி . மகேந்திரன் பி.ஏ.பி.எல். நகராட்சி வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்காக.

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 1186

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், சங்கரன்கோவில் நகராட்சி கதவு எண். 40 சங்குபுரம் 3ம் தெருவில் வசித்து வரும் திருமதி D.சாந்தி க/பெ துரைபாண்டியன் என்பவர் சங்குபுரம் தெரு சர்வே எண் 149/6ல் அனுமதியின்றி கட்டிடம் கட்டுவதை நிறுத்த கோரி நகராட்சி ஆணையாளர் அவர்களை 3ம் பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண். W.P.(MD).No. **1513/2021** ன் படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு எதிர்வழக்காட திரு.பி.மகேந்திரன்., பி.ஏ.பி.எல். நகராட்சி வழக்கறிஞர் மூலம் வக்காழத்து தாக்கல் செய்யவும் இவ்வழக்கினை நடத்துவதற்கான வழக்கறிஞர் கட்டணம் மற்றும் செலவு தொகை ரூ.7500/- (ரூபாய் ஏழாயிரத்து ஐந்நூறு மட்டும்) திரு. பி . மகேந்திரன் பி.ஏ.பி.எல். நகராட்சி வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்காக.

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 1187

சங்கரன்கோவில் நகராட்சி வார்டு - A, பிளாக் - 32, நகரளவு எண் 14 சங்கரன்கோவில் கிராமம் சர்வே எண்.92/1, 92/2ல் அமைந்துள்ள 8850.00 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தில் இணை இயக்குநர்/ உதவி இயக்குநர் (மு.கூ.பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் தென்காசி அவர்களால் தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவில் உள்ள சாலைகள், மற்றும் பொது உபயோக இடங்களை சங்கரன்கோவில் சார்பதிவாளர் அவர்களின் ஆவண எண் 175/2021 நாள் 12.01.2021ன் மூலம் தானபத்திரமாக பதிவு செய்து தானப்பத்திரத்தினை நகராட்சி வசம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திரு.முதார் மைதீன் என்பவரின் மனைப்பிரிவுக்கு அனுமதி அளிப்பது குறித்தும் ஒப்படைப்பு செய்த தானப்பத்திரம் நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

பொருளில் கண்டுள்ள மனைப்பிரிவில் உள்ள சாலைகள் நகராட்சியின் திருப்திகேற்ப மனைப்பிரிவு நிபந்தனையின்படி அமைக்கப்பட்டும் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்வதற்கும் தெரு விளக்கு மற்றும் மின் கம்பங்கள் அமைகைும் பணிக்கு ரூ. 190000/- (ரூபாய் ஒரு இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) நகராட்சிஅலுவலகத்தில் செலுத்தப்பட்டும் (2338.55 ச.மீ சாலை மற்றும் 56.46 ச.மீ உள்ள மனை முழுமையான பாத்தியமும் நகராட்சிக்கு தான பத்திர மூலம் சங்கரன்கோவில் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 175/2021 நாள் 12.01.2021 மூலம் பதிவு செய்து நகராட்சியின் பராமரிப்பிற்காக மனுதாரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இணை இயக்குநர்/ உதவி இயக்குநர் (மு.கூ.பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் தென்காசி அவர்களின் ந.க.எண் 43/2021 தெமாநஊஅ நாள் 20.01.2021 மனைப்பிரிவு ம.வ./தெமாநஊஅ எண் 02/2021 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கியுள்ள மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கவும் ஒப்பிடப்பட்ட வரைபடங்கள் மனுதாரருக்கு வழங்கவும் தானபத்திரம் மூலம் நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை நகர்மன்றமானது ஏற்று கொண்டு நகராட்சியால் பராமரிக்கப்படும் சாலை பதிவேடு (Road Register) மற்றும் சொத்துக்கள் பதிவேட்டிலும் (Immovable Property Register) பதிவு செய்து கொள்ளலாம் மேலும் ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது உபயோக

இடங்களை நகரளவை ஆவணங்களில் நகராட்சி பெயருக்கு பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளலாம் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 1188

சங்கரன்கோவில் நகராட்சி வார்டு - A, பிளாக் - 32, நகரளவு எண்கள்16/1/1, 16/2/1, 16/2/2, 16/3, 16/4 சங்கரன்கோவில் கிராமம் சர்வே எண்.88/1பாகம், 2 பாகம் 88/3 மற்றும் 88/4 ல் அமைந்துள்ள 9948.00 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தில் இணை இயக்குநர்/ உதவி இயக்குநர் (மு.கூ.பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் தென்காசி அவர்களால் தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவில் உள்ள சாலைகள், மற்றும் பொது உபயோக இடங்களை சங்கரன்கோவில் சார்பதிவாளர் அவர்களின் ஆவண எண் 4047/2020 நாள் 22.12.2020ன் மூலம் தானபத்திரமாக பதிவு செய்து தானப்பத்திரத்தினை நகராட்சி வசம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திரு.T.R.கணேசன் என்பவரின் மனைப்பிரிவுக்கு அனுமதி அளிப்பது குறித்தும் ஒப்படைப்பு செய்த தானப்பத்திரம் நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

பொருளில் கண்டுள்ள மனைப்பிரிவில் உள்ள சாலைகள் நகராட்சியின் திருப்திகேற்ப மனைப்பிரிவு நிபந்தனையின்படி அமைக்கப்பட்டும் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்வதற்கும் தெரு விளக்கு மற்றும் மின் கம்பங்கள் அமைகவும் பணிக்கு ரூ. 260000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) நகராட்சிஅலுவலகத்தில் செலுத்தப்பட்டும் (2968.62 ச.மீ சாலை மற்றும் 40.00 ச.மீ உள்ள மனை முழமையான பாத்தியமும் நகராட்சிக்கு தான பத்திர மூலம் சங்கரன்கோவில் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 4047/2020 நாள் 22.12.2020 மூலம் பதிவு செய்து நகராட்சியின் பராமரிப்பிற்காக மனுதாரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இணை இயக்குநர்/ உதவி இயக்குநர் (மு.கூ.பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் தென்காசி அவர்களின் ந.க.எண் 830/2020 தெமாநஊஅ நாள் 04.01.2021 மனைப்பிரிவு ம.வ./தெமாநஊஅ எண் 01/2021 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கியுள்ள மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கவும் ஒப்பிடப்பட்ட வரைபடங்கள் மனுதாரருக்கு வழங்கவும் தானபத்திரம் மூலம் நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை நகர்மன்றமானது ஏற்றுக்கொண்டு நகராட்சியால் பராமரிக்கப்படும் சாலை பதிவேடு (Road Register) மற்றும் சொத்துக்கள் பதிவேட்டிலும் (Immovable Property Register) பதிவு செய்து கொள்ளலாம் மேலும் ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை நகரளவை ஆவணங்களில் நகராட்சி பெயருக்கு பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளலாம் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 1189

சங்கரன்கோவில் நகராட்சியில் 14வது மத்திய நிதிக்குழு மான்யம் திட்டத்தின் கீழ் வார்டு 8, மாதாங்கோவில் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிக்கு ரூ.35.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 28.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு 26.02.2020ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டது. பணிகள் மேற்கொள்ளும்போது சம்பந்தப்பட்ட தெருவில் உள்ள பொதுமக்கள் தங்கள் தெருவில் பேவர் பிளாக் சாலை வேண்டாம், தார்ச்சாலை தான் சாலைக்கு வேண்டும் என கோரிக்கை விடுத்து வந்தனர். இதற்கிடையில் கொரோனா வைரஸ் (Covid 19) தாக்கம் ஏற்பட்டு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டதால் எவ்வித பணியும் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்பட்டது. மேலும், அதன் தொடர்ச்சியாக சட்டமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டு தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் இருந்ததால் பணிககளை மீண்டும் ஒப்பந்ததாரரால் துவக்க இயலாமல் போனது. மேற்படி தெருவில் ஆண்டுதோறும் நடைபெறும் தேரோட்டத்தை முன்னிட்டு. மீண்டும் அந்த தெருவில் உள்ள பொதுமக்கள் நகராட்சிக்கு தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து தார்ச்சாலை தான் கண்டிப்பாக வேண்டும் என மனுக்கள் அளித்துள்ளனர். மேலும், தற்போதைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர். சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் மேற்கண்ட இடத்தினை ஆய்வு செய்து பொதுமக்கள் கோரிக்கையின்படி அந்த இடத்தில் பேவர்பிளாக் சாலை அமைக்க வேண்டாம், தார்ச்சாலை

அமைத்து கொடுக்க வேண்டும் என கடிதம் மூலமாக அறிவுறுத்தியுள்ளார். மேலும் இப்பணி அரசின் திட்டப்பணி என்பதால் இந்த பணியில் மதிப்பீட்டு இனங்களை மாற்றி வேறு பணி செய்ய இயலாத நிலையில் உள்ளது. மேற்படி தெருவில் குடிநீர் குழாய் பணிக்காக சாலை தோண்டப்பட்டுபகுதிக்கு மட்டும் கான்கீரிட் தளம் அமைத்து எனவே, இந்த தெருவின் அருகில் தொடர்ச்சியாக உள்ள பழுதடைந்துள்ள அம்பேத்கர் தெருவில் பேவர் பிளாக் சாலையாக மாற்றுவதற்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகையான ரூ.35.50 இலட்சத்திற்கு செய்து முடிக்கவும், மேலும் இந்த பணியினை ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி எடுத்து வேலை உத்தரவு பெற்றுள்ள ஒப்பந்ததாரரை கொண்டு ஒப்பந்தகாரருக்கு விலை விகிதத்தில் செய்து முடிக்க மன்ற அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கு,
2. பொருளின் கண்ட பணியினை மேற்கொள்ள ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி எடுத்து வேலை உத்தரவு பெற்றுள்ள ஒப்பந்ததாரரை கொண்டு ஒப்பந்தகாரர் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்தில் செய்து முடிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 1190

சங்கரன்கோவில் நகராட்சியில் 2020-2021 மாநில பேரழிவு மறுமொழி நிதி ( ()) திட்டத்தின் கீழ் ஆட்டோ வாகனம் 2 எண்ணம் வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்:9691/2021/J2 நாள்:23.08.2018 அனுமதி அளித்துள்ளதின் அடிப்படையில் ரூ.16.00 லட்சத்திற்கு ஆட்டோ வாகனம் வாங்கும் பணிகள் மேற்கொள்வதற்கு 11.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. **Krysttal Motors (P) Ltd.,**<br>**39/2,M.M.Brother's Thottam,** **- 0.06% Less**<br>**Kandampatty Eye-Pass,**<br>**Salem - 636 005.**

2. **K J Motors**<br>**D 3/210/4,jalakandeswarar Nagar** **- 1.25% More**<br>**Krishnagiri Main road,**<br>**Hosur- 635 109.**

மேற்கண்டபணியை மேற்கொள்ள வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **Krysttal Motors (P) LtdSalem** என்பவர் மதிப்பீட்டுத் தொகையைவிட 0.06% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **Krysttal Motors (P) Ltd Salem** என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

தனி அதிகாரி மற்றும்<br>ஆணையாளர்,<br>சங்கரன்கோவில் நகராட்சி.

நாள் – **30.06.2021.**